# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 156/மா/2022**

**நாள் : 31.10.2022**

திருவாளர். A. செந்தில்நாதன் (ம) B. விஜயகுமார்,
சென்னை– 600 081. – முறையீட்டு மனுதாரர்கள்

மண்டல அலுவலர்,
மண்டலம்–4,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண்.193, என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் A. செந்தில்நாதன் மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, 14/15ல் வசிக்கும் B. விஜயகுமார் ஆகியோரின் 12.09.2022 நாளிட்ட மனு 13.09.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 156/மா/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் நெடுஞ்சாலை, எண்.193, என்கிற முகவரியில் வசிக்கும் திருவாளர்கள் A. செந்தில்நாதன் மற்றும் சென்னை, தண்டையார்பேட்டை, துர்கா தேவி நகர், சால்ட் குறுக்கு தெரு, 14/15ல் வசிக்கும் B. விஜயகுமார் ஆகியோரின் முறையீட்டு மனுவில்,

நாங்கள் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறோம். மேற்கண்ட முதல் முறையீட்டு மனுதாரரான எனது வீட்டின் அருகில் (தண்டையார் பேட்டை அப்போலோ மருத்துவமனை எதிரில்) பாஸ்கர் டிரேடர்ஸ் என்ற தனியார் கம்பெனி பருப்பு ஆலை செயல்பட்டு வருகிறது. இந்த பருப்பு ஆலையில் இருந்து வெளிவரும் அதிகப்படியான தூசிகள் காற்றில் கலந்து அருகில் வசிக்கும் வீடுகளில் சென்று படிந்து விடுகிறது. இதனால் நாங்கள் உட்பட்ட அருகில் உள்ளவர்களுக்கு சுவாசக்கோளாறு, மூச்சுத்திணறல் உள்ளிட்ட உடல் நலக்குறைவு ஏற்பட்டு வருகிறது.

இந்த பிரச்சனை தொடர்பாக அருகில் இருப்பவர்கள், வசிப்பவர்கள் பருப்பு ஆலை நிர்வாகம் மற்றும் உள்ளூர் அரசியல்வாதிகளின் மறைமுக எதிர்ப்புக்கு பயந்து புகார் அளிக்க முன்வருவதில்லை. இதை

பற்றி மேற்கண்ட ஆலை நிர்வாகத்திற்கு தெரிவித்தால், உங்கள் வீட்டை மாற்றி தூசி இல்லாத இடமாக பார்த்து செல்லுங்கள் என அலட்சியமாக கூறுகின்றனர். இந்த புகார் தொடர்பாக சென்னை பெருநகர மாநகராட்சி மண்டலம் - 04, அதிகாரிகளுக்கு பலமுறை கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது. 11.8.2022 அன்றும் எழுத்துப்பூர்வமான புகார் மனு கொடுக்கப்பட்டுள்ளது. எனினும் தற்போதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, உயர்திரு. ஐயா அவர்கள், இந்த புகாரினை விசாரணைக்கு ஏற்று மேற்கண்ட இந்த பருப்பு ஆலையில் இருந்து வெளிவரும் அதிகப்படியான தூசிகளை கட்டுப்படுத்த தகுந்த உத்தரவினை உரிய அதிகாரிகளுக்கு வழங்க வேண்டுமென தங்களை நாங்கள் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்." எனத் தெரிவித்துள்ளார்.

**2. இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 20.10.2022 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 7.10.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர்கள் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி, கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர் :

"மேற்கண்ட முறையீட்டு மனுதாரர்களில் ஒருவரான செந்தில்நாதன் ஆகிய எனது வீட்டின் அருகில் (துண்டையார் பேட்டை, அப்போலோ மருத்துவமனை எதிரில்) செயல்பட்டுவரும் பாஸ்கர் டிரேடர்ஸ் என்ற பருப்பு ஆலையிலிருந்து வெளிவரும் அதிகப்படியான தூசிகளால் அருகில் வசிப்போருக்கு சுவாச கோளாறு, மூச்சுத் திணறல் ஏற்பட்டு அவதிபடுகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களில் எனது மகளும் ஒருவர், மேற்கண்ட சுகாதார சீர்கேடு குறித்து மாநகராட்சி மண்டல 4, அதிகாரிகளுக்கு பலமுறை புகார் அளித்தும் 11.8.2022 அன்றும் புகார் மனு கொடுத்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட பருப்பு ஆலையிலிருந்து வெளிவரும் அதிகப்படியான தூசிகளை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கையினை எடுக்கும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம். மேலும் எங்களது 12.9.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" எனத் தெரிவித்துள்ளார்.

**பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-4ன் மண்டல துப்புரவு அலுவலர் 20.10.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி பின்வரும் தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :**

"சென்னை, தண்டையார்பேட்டை, பிள்ளையார் கோவில் தெரு, எண்.56ல் அமைந்துள்ள திரு. பாஸ்கர் என்பவருக்கு சொந்தமான பருப்பு ஆலைக்கு 80 H Pக்கு லைசென்ஸ் பெற்றுள்ளார். மேலும், மேற்கண்ட பருப்பு ஆலைக்கு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தில் Consent Order-ம் பெற்றுள்ளார். மேலும் FSSAI-லும் உரிமம் பெற்று மேற்கண்ட பருப்பு ஆலையை நடத்தி வருகிறார். எனினும், மனுதாரரின் புகாரையொட்டி, மேற்கண்ட ஆலையை ஆய்வு செய்து அதிகப்படியான தூசி வருமேயானால் அதற்கான நடவடிக்கை மாநகராட்சியால் எடுக்கப்படும் என்பதையும், மேலும் மேற்கண்ட ஆலையின் புகைப் போக்கியின் உயரத்தை அதிகமாக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மேற்கண்ட உரிமங்களின் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மண்டலம் 4ன் துப்புரவு அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் தெரியவருகின்றன.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ளது போல, தண்டையார்பேட்டை அப்போலோ மருத்துவமனை எதிரில் பாஸ்கர் டிரேடர்ஸ் என்ற பருப்பு ஆலையிலிருந்து தூசிகள் வெளிவருகிறது என அறிய முடிகிறது. இருப்பினும், திரு. பாஸ்கர் அவர்களுக்கு சொந்தமான பருப்பு ஆலைக்கு அவர் 80 H P லைசன்ஸ் பெற்றுள்ளதும், அவ்வாலைக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் Consent Order-ம், FSSAI-லும் உரிமம் பெற்றுள்ளதும் தெரியவருகிறது.

விரிவான விசாரணைக்குப் பின்னர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

**Article 21 of the Constitution of India Provides as follows:-**

> **"Protection of life and personel Liberty – No person shall be deprived of his life or personal liberty except according to procedure established by law."**

மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 21ல் தூய்மையான தண்ணீர் (ம) தூய்மையான காற்று இரண்டும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புகளில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது:-

**Article 21 includes the right to a healthy environment -**

> The Supreme Court held that the right to life under Article 21 of the Constitution is a fundamental right and includes the rights to free water and free air from pollution for the full enjoyment of life. If anything endangers or impairs that quality of life in derogation of laws a citizen has recourse of Article 32 of the Consititution for removing the pollution of water or air which may be detrimental to life. The Court has stated that Article 21 includes the enjoyment of pollutant-free water and air for full enjoyment of life as far as the release of industrial pollution into rivers is concerned.

**Right to Clean Environment**

> The Right to Life under Article 21 means a life of dignity to live in a proper environment free from the dangers of diseases and infection. Maintenance of health, preservation of the sanitation and environment have been held to fall within the purview of Article 21 as it adversely affects the life of the citizens and it amounts to slow poisoning and reducing the life of the citizens because of the hazards created if not checked .

மனுதாரர் குறிப்பிட்ட இந்த பருப்பு ஆலையினால் ஏற்படும் அசௌகரியங்களை குறிப்பிட்டு 11.8.2022 அன்று புகார் மனு கொடுத்தும் இன்றுவரை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 4 அலுவலர்களால் கள ஆய்வு செய்யாமல் மெத்தனமாக செயல்பட்டது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இம்முறைமன்ற விசாரணையில் (20.10.2022) மேற்கண்ட ஆலையை ஆய்வு செய்து அதிகப்படியான தூசி வருமேயானால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், ஆலையின் புகைப்போக்கியின் உயரத்தை அதிகமாக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்ததை, மனுதாரர் 11.8.2022 அன்று புகார் மனு கொடுத்த பின்னர் செயல்படுத்தி இருந்தால், இவ்வகையான புகார்களை தவிர்த்து இருக்கலாம். ஆனால் இம்முறைமன்ற விசாரணை வரை மெத்தனமாக இருந்த பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ஐ சேர்ந்த சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும், துப்புரவு அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு மேற்கண்ட ஆலையை ஆய்வு செய்து அதிகப்படியான தூசி வருமேயானால், பொது மக்களின் சுகாதாரத்தின் அவசியத்தை புரிந்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் சம்மந்தப்பட்ட அலுவலர்களுடன் இணைந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -4ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

2022–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. A. செந்தில்நாதன்,
S/o. அய்யாசாமி கவுண்டர்,
எண்.193, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
தண்டையார்பேட்டை, சென்னை – 600 081.

2) திரு. B. விஜயகுமார்,
14/15, சால்ட் குறுக்கு தெரு,
துர்கா தேவி நகர், தண்டையார்பேட்டை,
சென்னை – 600 081.

3) துணை ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
*He is requested to ensure the implementation of this order*

4) அரசு முதன்மைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

5) மண்டல அலுவலர்,
மண்டலம்–4, (அவரது பிரதிநிதி),
பெருநகர சென்னை மாநகராட்சி,
266, திருவெற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்.**

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

02/11/22

செயலாளர்.

2/11/22

Tamil Nadu State Local Bodies Ombudsman
GOVERNMENT OF TAMILNADU
TRUTH ALONE TRIUMPHS
Chennai-600 032